646

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
THIRUVANMIYUR. MADRAS-41.

திருவிளையாடலந்தாதி

மாயூரம்
விசுவபிர்ம்மவம்ச வைதீக உபாத்தியாயராகிய
சிவலிங்கவுபாத்தியாயரவர்கள்
இயற்றியது.

இஃது

மாயூரம்
ஸ்ரீகாமாட்சியம்மன் கோவில் விசாரணை தர்மகர்த்தரும்
ஆனரேரி மாஜிஸ்திரேட் மெம்பரிலொருவரும்
ஆகிய மகா-௱-௱-ஸ்ரீ
இராமசுவாமியாசாரியாரவர்களால்
கும்பகோணம்
லார்ட் ரிப்பன் பிரஸ் ஆபீசில்
பதிப்பிக்கப்பட்டது. 1886
விய வரு சித்திரை மீ

உ

சாற்றுக்கவிகள்

மதுரைத்திருஞான சம்மந்த சுவாமிகளாதீனம்
மகாசந்நிதானத்தின்றிருவுள்ளப்படி
மேற்படி யாதீனவித்வான் ம-௱-௱-ஸ்ரீ

சுந்தரலிங்கம்பிள்ளை அவர்கள்

இயற்றியது

அண்டரெலாந்தொண்டுசெயுந்திருவாலவாய்ச்சிவஞான்பினொடும்
பண்டடியார்கண்டுவப்பச்செய்தவிளையாடலறுபத்துநான்குந்
தண்டமிழந்தாதியினாற்கூறியருள்பெற்றனன்சீர்சலதிமாந்துங்
கொண்டலுலாந்தண்டலைமாயூரபுரசிவலிங்கக்குருசின்மாதோ.

திரிசிரபுரம் ம-௱-௱-ஸ்ரீ

தியாகராஜசெட்டியாரவர்கள்

இயற்றியது

திருவுலவுமலர்த்தடஞ்சூழ்மயிலையில்வாழ்விசுவகுலதிலகனான
தருவுலவுங்கரதலத்தெம்மால்சபாபதிசுகுணன்றவத்தால்வந்தோன்
மருவுலவுஞ்செந்தமிழ்தேர்சிவலிங்கநாவலனான்மாடக்கூடற்
குருவுலவுந்திருவிளையாட்டந்தாதியுலகுவப்பக்கூறினானே.

மாயூரம்வித்வான் ம-ள-ள-ஸ்ரீ

M-கிருஷ்ணய்யரவர்கள்

இயற்றியது

அலைகடலுடுத்த நிலமகளன்பின்
முலைசுரந்தொழுகு முதியதீம்பாலிற்
பெருகியவையைப் பெருநதிமண்சுமந்
தொருபிரம்படியுண் டுலகெலாந்தானாய்
மன்னியபெருமை மாநிலந்தெரிக்கு
மென்னுடையாரமு தினிதிருந்தருளு
மாடமலிமறுகின் மதுரைத்திருவிளை
யாடலந்தாதி யருமையிற்புனைந்து
பாடியும்பரவியும் பங்கயத்தயன்மா
றேடியுங்காணச் சேவடிக்கணிந்தனன்
பொருவொண்ணுருப் பூண்டெழுபுனிதன்
றிருவண்ணமலைச் சீர்திகழ்வடபான்
மருமலர்பொதுளி வானுறநிவந்த
முருகவிழ்சோலை மூலக்காடெனுந்
திருக்கிளர்தலத்திற் றிரிசூலப்பெயர்ப்
பருப்பதச்சாரலிற் பகர்சினந்தற்
பதிவளர்தவத்தோன் பரமநிட்டாபரன்
றுதிவளர்ஞானச் சுயம்பிரகாசன்

கடம்புலிக்கூட்டங்காவல்சூழ்ந்திருப்ப
வொடுங்குமட்டாங்க யோகமுற்றிருப்போ
னுலகுளவிச்சுவகுலத்துதித் தவருட்
பலர்பலர்கைக்கொளப் பாவனைகாட்டும்
பொய்த்தேசிகரைப் போலலாதுயர்ந்த
மெய்த்தேசிகனாய் வீற்றிருந்தருள்வோ
னருட்சிவலிங்கா சாரியனெனுமோர்
திருப்பெயர்பூண்டரு டேசிகோத்தம
னுலோகத்தவர்க ளுளத்தாமரைகளி
னிலாவும்பாதுகை நிகழ்செங்கமலச்
சீரடிபுனைந்த சென்னியன்பொன்னிசூ
ழூர்வளஞ்சிறந்தகவுரிமாயூரத்
தினிதமர்ந்திடுவோ னியற்சபாபதிப்பேர்ப்
புனிதன்றவத்தாற் புவியில்வந்துதித்து
நற்றமிழ்க்கலைக ளொடாறும்பயின்று
முற்றவுணர்ந்தமேதறிவாள
னங்கண்மாஞாலத்தகமகிழ்ந்
தெங்கணும்புகழ்சிவலிங்கதேசிகனே.

கும்பகோணம் ம-ள-ள-ஸ்ரீ தி. மு. மூக்கனாசாரியாரவர்கள்

இயற்றியது

திருவாலவாய்ப்பரமன்செய்விளையாடலை யினிது தேர்ந்துயாருங்,
கருவாயபவத்தழுந்தாவண்ண முயரந்தாதிகவின்றுதந்தான்,
மருவார்தண்பொழின்மயிலைவாழ்தருஞ்சீர்விசுவகுலமரபில்வந்தோ
னுருவாயைந்திலக்கணநாற்கவிப்புலமைச்சிவலிங்கவுரவோன்மன்றே



உ

சிவமயம்.

திருவாலவாயென்கிற

மதுரையில்

எழுந்தருளியிருக்கிற

கடவுளது

திருவிளையாடலந்தாதி

காப்பு

சித்திவிளைய கநித்தியன்பாதஞ்சிரத்தில்வைத்தே
பத்திவிளைய டியேன்றுதிபண்ணுவன்பண்ணைகளிற்
சுத்திவிளைய கமாமணிமேவித்துளங்குறுசிர்
முத்திவிளைய வர்க்கீயுமதுரைமுதல்வனையே.

MAHAMAHOPADHYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBR
TIRUVANMIYUR, MADRAS

கடவுள்வணக்கம்.

ஒக்கலிங்க ற்பகறூர்த்தனென்றோதவுலைந்துலைந்தே
ருக்கலிங்க ண்ணுணவுண்பதொத்துப்பொதுக்கோதையர்பா
லக்கலிங்க ம்பொன்னளித்தருந்தின்பையகன்மதுரைச்
சொக்கலிங்க ய்யன்றிருச்சேவடியைத்துதிமனமே. ௧

மயற்கணம்மைக்கு ழப்புந்தையலாரைமருவுறநஞ்
செயற்கணம்மைக்கு ந்தொடர்துன்பமேயதுதீரநெஞ்சே
வயற்கணம்மைக்கு லந்தோய்கழைகாட்டுமதுரையிலங்
கயற்கணம்மைக்கு ளிரம்புயத்தாளைக்கருதின்பமே. ௨

தந்தரப்பாண்டி கைப்பின்றிப்பசுநிரைதாமறிந்தி
ணந்தரப்பாண்டி லிலூதாயர்நொந்திட நட்பிலர்க
விந்தரப்பாண்டி யல்புற்கவவென்றவள்வேட்கவந்த
சுந்தரப்பாண்டி யனைமதுரேசற்றுதிசெய்வமே. ௩

சடாதகையா ருமுடிநீக்கியேகைதவர்மரபு
கெடாதகையா துமணிமுடிதாங்கத்தன்கேள்வனுக்குக்
கொடாதகையா க்கிணைக்கோலையுமீந்தருள்கூடலெங்க
டடாதகையா ரடியேயடியேன்முடிதங்கிடுமே. ௪

சிலம்போதர விந்தத்தாளன்னைதந்தைதன்செல்வவிள
வலம்போதர மருமான்மியமேவியமாமதுரைத்
தலம்போதர த்தென்னவர்தவஞ்சித்திக்கத்தண்ணருள்செ
யிலம்போதர ச்சித்திவேழத்தையாமென்றுமேத்துதுமே. ௫

கடவுள்வணக்கம்

ஒப்பிரமணிய வுக்கிரத்துக்கென்றொடுங்கவொன்னா
ரப்பிரமணிய லும்படிக்கார்த்துமுன்னம்பொருனை
வைப்பிரமணிய மாரப்புரக்கவருமதுரைச்
சுப்பிரமணிய தேவன்பதங்கடுணைநமக்கே. ௬

தோணிக்கவாசக மாரநின்றேற்சுட்டுஞ்சொல்லரருள்
பாணிக்கவாசக லச்சமணின்றெய்துபத்தரளி
நாணிக்கவாசக ஞ்செற்றேனைத்தூதுநடத்துமன்பர்
மாணிக்கவாசக ர்முன்னுமடிகளைவாழ்த்துதுமே. ௭

பண்டேசுர பியின்பாலரற்காட்டியபத்திதனைக்
கண்டேசுர முறநிந்தைசெய்தந்தையைக்கண்டித்தவன்
றொண்டேசுர ர்க்கருநின்மாலியமேதுனற்குரிய
சண்டேசுர னடித்தாமரையென்றன்றலைக்கணியே. ௮

அவையடக்கம்

தாரஞ்சோதி ப்பான்குருடன்மணிகைக்கொடகைமதுரா
புரஞ்சோதி செய்தருளாடலைச்சொல்லப்புகலம்முனை
வரஞ்சோதி யமறையாகமமோரும்வகையறியேன்
பரஞ்சோதி யாருமுனையளவன்றென்றபான்மைகண்டே. ௯

நூற்பயன்

தேனாட்சி சேர்பொழிலாரயன்மாறுதிதென்மதுரை
மீனாட்சி சுந்தரனுடலந்தாதியைமேவுமெய்யன்
பானாட்சி ரநமொலையிற்கேட்பவர்பாரளித்து
வானாட்சி பெற்றறமுற்றவன்பாதத்தில்வாழ்வர்களே. ௰

முற்றிற்று.

திருவிளையாடலந்தாதி

நூல்.

திருவிளையாட லுமைபதிசெய்சிவநகரைந்
தருவிளையாட கமாநகர்பூவிற்சததளத்த
மருவிளையாட ன்மருமகளோடுறைமாடமணக்
கருவிளையாட டங்கண்ணியர்வாழ்கன்னிமாபுரமே. ௧

மாகனகப்ப ங்கயப்பொய்கையாடுவோர்வல்வினைக
ளேகனகப்ப தங்கூடுவோர்சேற்கணிக்கேயுமிடப்
பாகனகப்ப கையில்லார்பணிந்துபரவுறுசெங்
கோகனகப்ப தக்கல்யாணசுந்தரன்கூடலிலே. ௨

ஏரணங்கா ய்த்திகழ்மீனாட்சிசுந்தரரொண்ணிமித்த
காரணங்கா ணாந்தென்கூடற்சொக்கேசர்கருணைப்பெருக்
காரணங்கா முற்றறைசோமசுந்தரனையரிட
நாரணங்கா மன்பரெண்ணாரரியயனற்புரமே. ௩

புரந்தரனா ர்க்குவிருத்திரனைக்கொன்றுபூண்ட பழி
துரந்தரனா முனைப்பூசித்துத்தோத்திரஞ்சொல்லவன்பு
நிரந்தரனா றவருள்புரிந்தோய்துதிநின்றனைச்செய்
தரந்தரனா யடியேற்கென்றுகூடற்றலத்தையனே. ௪

அயிரா வதத்தைத்துருவாசன்சாபமணுகமத்தாற்
றயிரா ணதங்குள்ளுடைவதுபோலுட்டளர்ந்துடலா
யுயிரா யதனுளுயிராயுயிர்கட்குறுதிவிளை
பயிரா யமர்மதுரேசரியற்பத்திபண்ணியதே. ௫

இயனகர ஞ்செய்குலசேகரனுக் கெழுத்தினத்துள்
வியனகர ய்புனைதெய்வக்கடம்பவிடாரிடத்து
தயனகர த்தெல்லைசாற்றிமதுரையதாக்கியங்குப்
பயனகர ன்பத்திபண்ணார் தவத்தின்பலனவமே. ௬

அவதார ஞ்செய்துதடாதகையாய் மலயத்துவசன்
றவதார ங்காஞ்சனமாலைதன்பான்முடிதாங்கிமகி
ழுவதார ஞ்சொற்சிவைகொள்ளமகிழ்ந்த நின்னுண்மையியம்
புவதார ஞ்சத்தனரிபணிகூடற் புரத்தரசே. ௭

அரசமணர்ந்த ரவம்பிகையைச்செய்தன்பார்சுமதி
பரசமணாந்த ரம்போற்றமதுரையிற் பாண்டியனைப்
பிரசமணாந்த ருமாலைமணிமுடி பெற்றபெம்மாற்
கிரசமணாந்த மிழ்மாலையைச்சாத்தவிடர்வெள்குமே. ௮

வெள்ளிப்பொது வின்மதுராபுரிதனின்மெய்யன்பெனும்
புள்ளிப்பொது ளுமடியருட் பாம்பு புலிமுனியு
மள்ளிப்பொது ப்புலன்கட்பொறிகொண்டிடவாடினன்மா
லெள்ளிப்பொது வர்குலத்தானயன்றொழுமெண்குணனே. ௯

குண்டோத ரனுதரத்தில்வடவையைக் கூட்டிமொழி
கண்டோத குமமுதேயெனுமங்கயற்கண்ணியைநீ
மண்டோத னமிடச்செய்தவமானம் வரச்செய்ததென்
வண்டோத ரவமலர்ப்பொழிற்கூடலின் மன்னவனே. ௰

அன்னம்படு குழிவையையழைத்தருந்தக்குறட்கு
முன்னம்படு துயர்போக்கினர்செஞ்சடைமோலியொடு
மன்னம்படு விடநாகந்தணைந்துமதுரைநக
ரின்னம்படு பவத்துன்பறுத்தாளவெழுந்தவரோ. ௰௧

எழுவாரு தியுமழைப்பமென்றேயுளத்தெண்ணு முன்னி
கழுவாரு காந்தக்கடலெனக்கூடலிற்கண்டடக்கித்
தொழுவாரு யாவருடேவியன்னைக்குத்தோற்றுவித்தான்
றழுவாரு ழையைமறைத்துவருஞ்சுந்தரச்செம்மலே. ௰௨

மலயத்துவ சன்மகவான்பதிநின்றுமன்னு நில
வலயத்துவ ரச்செய்தில்லொடவனைவருகடலின்
றலயத்துவ முறவாட்டித்தம்மூருருதந்தனரா
லலயத்துவ மதுரேசரன்னாயகத்துகந்தே. ௰௩

உக்கிரமாற னெனும்பேர்மகவையுமைக்களித்தான்
றக்கிரமாற முதுக்கெனப்பூவிண்டலத்துக்கொன்னார்
விக்கிரமாற ச்செழியர்மரபுவிருத்திபெறச்
சக்கிரமாற வஞ்செய்கூடலையன்றயையிதுவே. ௰௪

வேல்வளை செண்டுக்கிரமாறற்கீந்தன்புமேவுமணம்
வால்வளை யத்தவனப்பாருங்காந்திமதியைச்செய்வித்
தோல்வளை நீருலகாளவைத்தோர்பண்டையொள்வடிவா
யால்வளை யான்றொழத்தென்கூடல்வாழுமருட்கடலே. ௰௫

கடலா ய்வருணன்வரவிந்திரனழுக்காறதனால்
விடலா ய்நங்கூடலழிவதன்முன்னம்விழித்துவைவே
லடலா யுதம்விடுவற்றுமென்றுக்கிரனார்கனவி
லுடலா ய்பொருளுயிர்கொள்குருவாஞ்சிவமோதியதே. ௰௬

தேவேந்திர னுலகண்டவத்தாற்சென்றுதிண்டாளம்
பூவேந்திர ண்டுபுயவலியாற்கட்டிப்போம்புயலைக்
காவேந்திர ங்கமுடிவீழவீசிச்செங்கைவளைகாண்
கோவேந்திர வெப்பழித்தான்மதுரையெங்கோமகனே. ௰௭

கனகவரைய டைந்தான்கூட னின்றதைக்காக்கும்வல
வனகவரைய றுவீறினைச்செண்டினில்வாங்கியந்தப்
பனகவரைய மலையினிதியங்கள்பற்றிவந்தா
னனகவரைய தளார்மகன்மாந்தர்க்களித்திடவே. ௰௮

வேதவருத்த மறியோமெனநைமிசாரணிய
ரோதவருத்த முறீரொன்றரபத்தனேர்மதுரா
யாதவருத்த மரோதுவரென்னவகன்றவரான்
மாதவருத்த துணர்ந்துவந்தாருள்ளமாண்புறவே. ௰௯

மாணிக்கந் தந்துக்கிரன்பேரநீசென்றமாமணிசே
ராணிக்க மைபொன்முடிக்குணையேலழகாவிலையாழ்
பாணிக்க ச்செய்யென்றபின்னபிடேகநற்பாண்டியவென்
வாணிக்க வன்விலைதந்ததென்கூடல்வருமணியே. ௨௰

வருண ன்வயிற்றுவலியாந்தணிக்கமதுரைவிட்ட
விருண ந்தமர்கடலீதபிடேகணையேலென்றுநீ
விருண ந்தநீரறச்செய்மினென்றேவினர்மெய்மையன்பி
னருண ந்தமலர்முடியுறுமம்முகிறுன்கினையே. ௨௧

நான்மாட க்கூடலெனும்பேர்மதுரைக்குநண்ணவங்கே
வான்மாட க்கொண்மூவளைந்தவ்வருணன்மழைதடுக்கத்
தேன்மாட கப்பண்மொழிபாகன்சீர்தெரிந்தேமுகுர
மேன்மாட ம்வீழளவும்விலகானன்பினெல்லைவிட்டே. ௨௨

எல்லா ம்வலசித்தராகிமதுரையெம்மீசர்வந்து
புல்லா மமேருவிதுவதுபெண்ணாண்புருடர்பெண்கள்
கல்லா ரறிஞரறிஞர்கல்லானெனக்காட்டினர்கா
ணில்லா ருடையரிவரவராகவுமேகலந்தே. ௨௩

கல்லானை கூடவிற்கைநீட்டிவாங்கிக்கரும்பையெலாம்
வல்லானை யன்னருளாலுண்ணக்கண்டவழுதியுனை
யல்லானை வேற்குமகவீபவரொவராமெனவங்
கல்லானை நோக்கியுண்டென்றானப்பேறுநன்றானதுவே. உச

ஆனையம்பா லெய்யவட்டாலைமண்டபமாற்றிடுநீ
சேனையம்பா வுந்துவசவென்றேமதுரைச்சிவனா
றானையம்பா ருந்தலையருஞ்சோழனுமுட்கவெய்தார்
தேனையம்பா லைநிகர்மொழிபாகர்செயல்விருதே. உரு

விருத்த வுருவமன்பாற்கொண்டுவந்துவிருந்தருந்தித்
திருத்த குமாரவுருவாயயலவர்சேரவப்போ
துருத்த லறமகவாகிக்கவுரிமுன்னுள்ளன்பினால்
வருத்த மண்காலுண்மையானான்மதுரைநம்மாறனன்றே. உசு

மாறிநட ஞ்செயென்றேமன்னர்சேகரமாறனுளந்
தேறிநட லையிலன்புற்றுக்கூடற்சிவபெருமா
னேறிநட வடியேற்றடிதாழ்ந்திடவேநடிக்க
வாறிநட ந்தமுதலில்பெம்மாற்சறைந்தான்பழிச்சே. உஎ

பழியஞ்சி வந்தநங்கூடற்குலோத்துங்கபார்ப்பனியை
யொழியஞ்சி வீமுகமெய்வணிகன்மணத்தோர்வையென்றே
விழியஞ்சி தநுதலார்சொற்றவாறந்தவேந்தறிந்தூழ்
வழியஞ்சி யல்பினனுக்கோதியீந்தனன்மாபொருளே. உஅ

மாபா தகந்தீர்த்திட வேண்டுமென்றுமறவுருவொ
டேபா தையிலுமையாளொடுங்கூடற்கிறைவர்வந்து
நோபா தைகொள்ளத்தன்றாய்தந்தைக்கேசெய்தநொய்யனையா
வாபா துகாத்ததென்னோவவனுக்கருளாலங்ஙனே. உகூ

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

அங்கங்க ளஞ்சித்தனாரியன்பன்னிக்கயரவமர்
பொங்கங்க ளத்திலறவெட்டினானந்தப்பூரியனைக்
கங்கங்க ளாரவவ்வாரியன்போற்சென்றுகாவிநறைக்
கொங்கங்க ளற்றிற்கமழுஞ்செய்க்கூடற்குணாகரனே. ௯௰

நாகமெய் தேயந்நகரார்விடத்தினலிவுறுவ
தாகமெய் வாடியனந்தகுணனுள்ளயர்ந்துசுக
போகமெய் யன்பர்க்கருண்மதுரேசபுரந்திடென
மாகமெய் திங்களமுதளித்தார்துயர்மாய்ந்திடவே. ௯௧

மாயப்ப சுவையமணர்களேவமருண்டரசன்
றாயப்ப னுயிர்காக்குமதுரைத்தலைவமுடி
பாயப்ப னேயெனநந்தியைவிட்டப்பசுப்படுத்தான்
றீயப்ப மர்வில்லிராகவன்போற்றத்திகழ்மெய்யனே. ௯௨

மெய்க்கா ட்டுத்தீட்டமதுரையெம்மீசர் விடைப்புரவி
யுய்க்கா க்குலமணிமாறனற்சேனையையுற்றவைக
ளய்க்கா க்குஞ்சுந்தரசாமந்தனன்பினுக்காவரவெண்
பொய்க்கா க்குஞ்சேதிராயன்போயினான்புலிப்போகுலைந்தே.

உலவாக்கி ழிகுலபூடணமாறற்குதவித்தன்மம்
பலவாக்கி னாற்கனவிற்சொலித்தேற்றியப்பண்பனுளத்
திலவாக்கி சைந்தபடிமதுரேசமொழின்முடியி
னிலவாக்கி மகரனாரளித்தாரந்நிலவளமே. ௯௪

வளையிலை வாங்குமெனக்கூய்மதுரையில்வைசியப்பெண்
களையிலை நாணமெனும்படிமாரனுங்காமம்விளை
முளையிலை யம்பிடுமாறவ்வளையவர்முன்கையிட்டா
ரளையிலை நேர்சனுமைக்கறியாமலடைந்தையரோ. ௯௫

அட்ட மகாசித்திவேண்டிப்பிழைசெய்தவாறுபெண்கட்
கிட்ட மர்சாபமொழித்துமதுரையெம்மீசர்முன்பு
மட்ட றுமான்மியமாரணிமாதிவகுத்தனரச்
சிட்ட னையேதொழுவோருக்கன்றேவினைத்தீவிடுமே. ௩௬

விடையா மிலச்சினையிட்ட தியாங்கச்சிமேவுமெய்யன்
புடையா னுயர்கடம்வெட்டியசோழனொளிர்மதுரை
யடையா த்தரிசிக்குமாறுசெய்தோனமையஞ்சலென்றே
சடை யார்பரன்குலபூடணற்கீந்தனன் றண்ணருளே. ௩௭

தண்ணீ ர்தருபந்தல்வைத்தரசேந்திரன்றனைக்கவன்
கண்ணீ ர்மையிறம்பிகச்சியன்சேனைகலங்குறவே
யுண்ணீ ர்புனலென்றளித்தமதுரையுமாபதியை
யெண்ணீ ருலகத்துழல்வீர்மெய்ப்பத்தியிரசமுற்றே. ௩௮

ரசவாத ஞ்செய்துதிருப்பூவணத்தபிராமமிகுந்
தசவாத மருங்குயப்பொன்னனுண்முன்புதன்னுருவங்
கசவாத வண்செயத்தந்தார்மதியங்கனலியுயிர்
வசவாத நீர்மண்வெளியாய்மதுரைவளரரசே. ௩௯

வளவனை ச்சுந்தரர்பாதமுடியன்செய்வஞ்சமரிற்
களவனை மேனியவேடுருவாகிக்கடுகிமடு
வுளவனை வீட்டியம்மாறனையேற்றியுவந்தனரந்
தளவனை யநகைபங்கார்மதுரையர்தம்முளமே. ௪௰

உலவா தவாலரிக்கோட்டையையுய்த்தன்முன்னகத்திற்
செலவா வெடுக்குந்தொறுமல்குநையலைசிந்தையறம்
பலவா வியற்றடியார்க்கினியாயென்றபண்ணவக
மலவா விழும்மதுரேசவிடுவியென்மாமடமே. ௪௧

மாமனென வணிகன்மகற்கேவந்துமாமதுரைச்
சேமனென வனியாயமிஞ்ஞாதியர்செய்வழக்கென்
றேமனென வின்முறையவரோடவியம்பினனந்
நேமனென க்குந்திருவரவீகுவனோர்வரமே. ௪௨

வரகுண ற்கத்தியிடைமருதூரிடைமாறிடக்கோ
புரகுண க்குச் சரியாற்போகலையென்றுபுண்ணியமாந்
தரகுணக் குண்டையர்கூடலிற்றம்முலகந்தெரிக்க
விரகுணக் கம்படைத்தானேயுயரவ்விறலரசே. ௪௩

விறகான தைவிற்கவந்தேமநாதன்வெருண்டுமுவக்
கிறகான ஞ்செய்துநற்பாணனடியன்றன்கீதமிசைத்
தறகான வனெனக்கூடலிற்றள்ளத்தனித்தெனென்ற
பிறகான வரதுசொன்னாரன்பன்கட்பெயர்ந்திருந்தே. ௪௪

திருமுகந்த ந்திசையன்சேரமானிடஞ்சென்றங்கிரு
வருமுகந்த ன்புறச்செய்தார்மதுரைவரகுணன்பே
ருருமுகந்த ங்குயர்ந்தோங்கியமாடத்துறுநிதியைத்
தருமுகந்த த்தையமொன்சொல்வன்பாணன்றவப்பலனே. ௪௫

பலகையி சைவலவன்பெறக்கூடற்பரன்பள்ளியி
லுலகையி சைபெறவாளங்கயற்கணியோடமர்கா
விலகையிசை கொளக்கூவியிட்டானவனெட்டுணையு
நலகையிசை விலெனையாள்வனேவந்துநன்கிசைந்தே. ௪௬

இசையங் கனையரிருவருளீழத்தினனைமெச்சுங்
குசையங் குதிரையிராசவிராசனைக்கொண்டுமிகு
விசையங் கொடுத்திடப்பாவலராவையர்வேடங்கொண்டார்
திசையங் கனைத்தும்புகழ்கூடற்பாணன்றிருப்பணிக்கே. ௪௭

பன்றிக்கு ருளைகளாய்த்தலைவன்சாபம்பகரவந்த
வென்றிக்கு ருநகர்வேளாண்புதல்வர்முன்வேட்டைதனிற்
கன்றிக்கு ரவர்ச்செழியன்கொலக்கலுழ்காலமுலை
நன்றிக்கு ருகுமதுரேசர்தாயெனநல்கினரே. ௬௮

வனங்களா றிரண்டும்மநுநீதியையவெல்லா
ஞானங்களா னெறிகற்றதையேகண்டெனமதுரைக்
கோனங்களா வித்தன்மந்திரியாக்கிமுன்கொள்ளச்செய்த
தானங்களா தரைப்பதியென்றற்கமர்கரியே. ௬௯

கரிக்குரு விக்குமெய்யன்புற்றவந்தனைக்கண்டொருமூ
வரிக்குரு மித்தஞ்சயமுபதேசித்துமாமதுரா
புரிக்குரு மூர்த்திவினுவவரமுன்புரிந்தருளி
னரிக்குரு குக்குள்வலியானென்றேதவநாமமுற்றே. ௭௰

நாரைமுனி வர்களெங்கரைசெய்லீலைநவிலவந்த
வேரைமுனி யற்றநல்வினையீதென்றுணர்ந்தனந்தம்
பேரைமுனி வந்துறலும்வினையமுத்திப்பேறளித்தா
னூரைமுனி வனவன்கூடலில்வந்தமர்ந்திருமே. ௭௧

திருவாலவா யென்றகூடற்குநாமஞ்செயக்கங்கணைப்
பெருவாலவா டரவானகொல்லைபிறங்கமுன்போற்
கருவாலவா னகரிற்றோன்றினோர்க்கிடங்காட்டினர்சத்
துருவாலவா ய்வங்கியசேகரன்முனஞ்சுந்தரரே. ௭௨

சுந்தர ப்பேரம்பினைவிக்கிரமற்சோழன்சண்டம்
வந்தர சர்க்கொடுவங்கியசேகரமாறன்முன்போர்
தந்தர நப்படையாவுஞ்சயமுஞ்சரியவவ
சுந்தர வந்தனர்மாமதுராபுரிச்சங்கரரே ௭௩

சங்கப்பல கைபுலவர்க்களித்துத்தடமதுரை
தங்கப்பல வக்கராமாமந்நாற்பதிற்சாரொண்மரோ
டங்கப்பல ன்றரும்பாவாய்ந்தகாரத்தவையருற்றார்
துங்கப்பல ச்சொன்மகட்கயன்சாபந்தொலைதரவே. ௫௪

தருமித னம்பெறச்சம்பகன்பொற்கிழிதந்திடுமா
றருமித ஞ்சேர்கொங்குதேர்வாழ்க்கையென்கவியாங்கனுப்ப
விருமித ன்றேமியல்பென்றதென்றேமதுரேசர்கண்ணுற்
கிருமித ன்போற்றுடித்துத்தடத்தாழ்ந்தனன்கீரனன்றே ௫௫

கீரனுக்கு க்கபிலன்முதலோரிந்தக்கேடகற்று
வாரனுக்கு ங்குயத்தாள்பங்கனேயெனமாமதுரை
யூரனுக்கு ண்டத்திலத்தமளிப்பவுவந்துவந்த
நீரனுக்கு ம்மனத்தாற்றுதிசொற்றனனேரிலற்கே. ௫௬

இலக்கண ந்தன்னையக்கீரனுக்கும்மதுரேசர்நன்கு
சொலக்கண வேயுமைசொல்லான்மலயநற்றாயனைக்கூ
யலக்கண லியத்தமிழ்விதிசொல்லெனவாங்கவனத்
தலக்கண யமுறவவ்வாறுரைத்தனன்றன்கலந்தே. ௫௭

கலகந் தவிரமதுரைப்புலவிர்கவிகளையிவ்
வுலகந் துதிக்குமிவ்வூமனிடஞ்சென்றுரைத்திடுமின்
சிலகந் துளக்கிச்சிலவெறுப்பானென்றுசெப்பிமுன்னீ
ணிலகந் தரார்தெளிவித்தாரகன்றநிலத்திடையே. ௫௮

இடைக்காட ன்றன்பிணக்கைக்கண்டுகூடவிடத்திலொளிர்
சடைக்காட ரன்றுமறைந்துத்தராதிசைசார்ந்திருந்து
கொடைக்காட வனுங்குலேசன்றுதிக்கமுன்கூறுதமிழ்த்
தொடைக்காட ன்மேவவுங்குற்றாரவர்தந்துணைவலிதே ௫௯

வலையம்பர த்திடைவீசி முன்னந்திமயிலைபற்றித்
தலையம்பர வன்மகளாகநீத்தருடண்ணரும்பர்
முலையம்பர விழியம்மையைமன்றன்முடித்துவந்தார்
மலையம்பர வமுடியார்மதுரைதவாதுறவே. ௬௰

வாதநகர ர்பரிக்கரிமர்த்தனன்வான்பொருளைப்
பேதநகர மின்றிக்கூடலீயப்பெருந்துறையிற்
போதநகர ர்தங்கோயிற்புதுக்கமுன்போந்துருந்தத்
தோதநகர முதன்மறுவுண்மையுணர்த்தினரோ ௬௧

நரிபரிவா ணிகளாக்கிமதுரையினந்திமுன்னோர்
தெரிபரிவா ர்களாய்வரவந்தெங்கடேவன்றன்பாற்
புரிபரிவா ரன்பர்துன்பறவேதப்புரவியுய்த்திட்
டரிபரிவா கைப்புகன்றளித்தானரிமர்த்தனற்கே. ௬௨

தன்பரி சம்புருவாக்கமதுரையெஞ்சம்பவைகள்
புன்பரி சான்முனமுள்ளபரிகளைப்புண்படுத்திப்
பின்பரி தந்தொறுமூளையிட்டோடிடப்பிற்றையினிற்
பொன்பரி சான்மன்னனன்பனையார்த்தனன்புண்மண்டவே

மண்டலை யேந்தவர்திப்பிட்டுண்டேவையையவன்சுனையை
யண்டலை நீரடைப்பானடிபட்டருளையர்சொல்லாற்
றெண்டலை யாமையைக்கண்டுமதுரையிற்றேறுத்திரித்தான்
பண்டலை ப்பாவன்பனையரிமர்த்தன பாண்டியனே. ௬௪

பாண்டிய ற்கேவுஞ்சுரத்தைச்சமண்முன்சம்பந்தவையே
வேண்டிய மங்கைக்கரசிகுலச்சிறைமெய்யர்மகிழ்
வாண்டிய லும்படிக்கூனுடுந்தீர்த்திடவச்சமயர்
தாண்டிய வன்வரச்செய்தகூடலெஞ்சம்பருளே. ௬௫

சமணைய ந்தீரச்செந்தீயினிலேடிட்டுஞ்சண்பயர்கோன்
கமணைய ம்வையையிலேற்றியுமேற்றிக்கழுவினிலக்
தமணைய ணாநமனூரோற்றிச்சைவந்தழைக்கச்செய்த
திமணைய ரசுசெய்கூடலணைந்தெழுத்தின்வன்மையே. ௬௬

வன்னியங்கூ வலிலிங்கமதுரையம்மான் மங்கையன்
புன்னியங்கூ ரரவந்தீண்டியுய்ந்தவுரியன்மண
மின்னியங்கூ ரப்புறம்பியத்தாற்றவிசைத்தவருட்
டன்னியங்கூ டியவாயர்சொற்போல்வரத்தந்தனனே. ௬௭

தன்னானந்தக்க டலுண்மூழ்குமுள்ளத்தவர்கள்வந்து
பொன்னானந்தக்க மலத்தடமாடிப்பொடிமணிபூண்
டுன்னானந்தக்க மதுரேசற்பூசித்துவந்தனரா
லன்னானந்தக்க ணத்தார்க்களித்தான்றனருளுண்மையே. ௬௮

உண்டானந்தந்த ளரன்மனமேமுன்னுனுற்றநன்காற்
றுண்டானந்தந்த மலையெய்தருளியசுந்தரர்க்கே.
குண்டானந்தந்த த்தடாகங்கடோறுங்குலவளிகள்
வண்டானந்தந்த மிணைதேர்மதுரையில்வைகினமே. ௬௯

வய்யாகரண ர்களாயிலென்னூல்பலவாசித்துமென்
மெய்யாகரண த்தராய்வேதமூவிசைமேவச்சொலிச்
செய்யாகரண லம்பர்க்கவென்றேத்துந்திருமதுரை
யய்யாகரண நிற்காக்கிவெல்லார்களயிந்தியமே. ௭௰

இந்தம்பராவணி வேணியர்மாமதுரேசர்பன்றித்
தந்தம்பராவணி யாவணிமார்பர்தடங்கையினி
னந்தம்பராவணி மூலமெனுந்திருநாளர்தம்மைச்
சொந்தம்பராவணி யேனைவந்தாளச்சுதந்திரரோ. ௭௧

அந்தானாக மிடைவிழிகொங்கைத்தடாதகையை
வந்தானாக மவாறேமணஞ்செய்துமாமதுரைச்
சுந்தரனாக நின்றாண்டதுபோலென்முன்றோன்றிமெய்ச்சு
கந்தரனாக நடையாயென்றேசொல்கருத்துவந்தே எ௨

கருத்தலையானை நிகர்காலன்கையினிற்காட்டியெனை
வருத்தலையானை யவைத்ததுபோதுமிம்மண்முனிச்சித்
திருத்தலையானை ம்பொறிவழிநிற்றலையெள்ளவென்றாட்
டிருத்தலையானை யடிமைகொள்கூடலெஞ்சிற்பரனே. எ௩

சிற்பரவானந்த வழ்மாடநூற்படிசெய்மதுரைத்
தற்பரவானந்த சம்புசதாசிவசங்கரமுன்
பொற்பரவானந்த மர்கடற்பள்ளியன்போற்றவிடத்
தற்பரவானந்த வைத்தாய்களத்தெனையாதரியே எ௪

ஆதவனம்பலவா வறச்செய்தவமலவன்ப
ரோதவனம்பலவா வமைநாமவுனதுளமா
மாதவனம்பலவா வெனக்கைக்கொண்மதுரையைய
சீதவனம்பலவா னலத்திற்றுயர் செய்திடவே. எ௫

இடங்களையா னையைக்காப்பான்றிகிரியினாலெறிந்த
படங்களையா னனர்மாமதுரேசர்பதமலரின்
மடங்களையா மனனேயன்புவைதுன்பவாரிதியின்
றடங்களையா ங்கண்டமர்வுறுவோமிதுசத்தியமே. எ௬

சத்துச்சித்தானந்த மாமதுரேசசரணமெய்வே
தத்துச்சித்தானந்த னிடஞ்செய்யுஞ்சதுரமுன்கா
மத்துச்சித்தானந்த வாரியனில்லின்மனமுனக்கோ
பித்துச்சித்தானந்த மோடமர்செய்யென்றபிஞ்ஞகனே. எ௭

பிஞ்சம்புலியித ழிச்சடையாயிப்பிரபஞ்சத்தில்
வஞ்சம்புலியித யத்தன்பிலேற்கருள்வைப்பையிடை
விஞ்சம்புலியித மாரதளாய்செய்யின்மெல்லியர்க்காண்
கஞ்சம்புலியித ழான்முகிழ்கூடலெங்கண்ணுதலே. ௭௮

கண்ணப்பவந்த த்திருமால்வலதுகைக்காழிதந்தோ
யெண்ணப்பவந்த னையொண்ணுதடைந்திடரோய்ந்துழலப்
பண்ணப்பவந்த மியேனயர்ந்தேன்சிற்பரமதுரை
விண்ணப்பவந்த ருள்செய்தியன்றேல்விழுவேனரகே. ௭௯

நரகேசரிக்கு ச்சரபவுருக்கொடுநண்ணினரந்
தரகேசரிக்கு விண்போற்று மதுரைத்தலத்தர்கையி
லுரகேசரிக்கு மொழியுமைபாகனையுள்ளியுய்யும்
விரகேசரிக்கு தவில்லாதவுள்ளத்தர்வீணர்களே. ௮௦

கள்ளத்தனங்க முழுதிலும்பொய்யன் கனவினிலுந்
துள்ளத்தனங்க ளுறுமாதரைத்துய்க்குந்துட்டனனல்
வெள்ளத்தனங்க னையாட்டுங்கணுயெனைவிட்டிடல்செய்ப்
பள்ளத்தனங்க மலங்காண்மதுரைப்பரசிவனே. ௮௧

சிவனாரந்தா ழ்குழலங்கயற்கண்ணிதிருவயிற்றுற்
பவனாரந்தா ங்கியபாண்டியனுக்குப்படைகளைத்தந்
தவனாரந்தா வுஞ்சடையான்றென்கூடற்றயாகரனே
யவனாரந்தா மதியாதுதந்தாள்குவனஞ்சனெஞ்சே. ௮௨

அஞ்சக்கரவரியார்க்குச்சரண மெய்யன்பர்கட்கு
நெஞ்சக்கரவரியார்க்குச்சரண நிலம்பிளந்த
செஞ்சக்கரவரியார்க்குச்சரண ந்தெரிக்கிலர்க்கு
மஞ்சக்கரவரியார்க்குச்சரண மதுரையிலே. ௮௩

இலைவென்றவேலை வெலும்விழியாடனிடத்தர்முன்பு
மலைவென்றவேலை யிற்பற்காட்டுங்கூடன்மன்வான்பதம்விட்
டலைவென்றவேலை முன்றுரவலைக்குறித்தாலதனை
உலைவென்றவேலை ம்பொறியால்விடயத்துழலுநெஞ்சே ௮௪

நெஞ்சன்றலைய த்திருக்கண்டியென்றுநிகழ்தலத்தி
லஞ்சன்றலைய ரிந்தாருமனுமிலைகயங்குலியான்
பஞ்சன்றலைய முகங்கண்மதுரைப்பரமன்களை
நஞ்சன்றலைய ன்புடையேநமற்குநடுங்கலமே. ௮௫

நடுநோக்க முன்பக்கலில்லைகொல்லோநல்குநற்றங்கைதாய்க்
கடுநோக்க மங்கொளச்செய்தானையாண்டனையம்மவன்பி
னெடுநோக்க நின்கணருள்வேண்டுவேற்கருளுன்னலைமா
வடுநோக்க வம்பிகைபங்காமதுரைமயேச்சரனே. ௮௬

சுரந்தருவான னியுற்றபர்செங்கதிர்தோற்கச்செய்த
தரந்தருவான வனும்புகழ்கூடற்றமிழர்குலம்
வரந்தருவான ங்குவந்தபிராட்டிமகிழ்ந்திடவோ
புரந்தருவான மதனையாளெங்கள்புண்ணியனே. ௮௭

புண்ணியனைய கன்பூரணனையன்புராணனன்பிற்
கண்ணியனைய டியார்க்கடியார்க்கடியார்க்கடிமை
யெண்ணியனைய டியேற்கருள்வான்மதுரேசனிம்பக்
கண்ணியனைய வனுதவிநென்சொற்கயப்பமர்ந்தே. ௮௮

கயலாக்கக் கண்ணிதன்பங்காகனகவிற்கையவிளை
வயலாக்க மீனமலர்மதுரேசமதியுடையோர்
மயலாக்க டிகொளும்வேட்டகத்தெய்தியகிழ்வையுறுஞ்
செயலாக்க யன்றென்றலகமென்றெவிங்குசெப்புவதே. ௮௯

செப்பாரி ருகுயத்தங்கயற்கண்ணி தினமமுதுண்
டப்பாரி ருஞ்சடைக்கூடலையாபின்பருந்தச்செயு
மெப்பாரி யருந்தந்தம்மணவாளர்க்கியற்றுமுறை
தப்பாரி ருக்குமிடத்திருந்தானின்றகைமையென்னே ௯௰

என்னையு மாட்கொளுஞ்சுந்தரரோயெங்களங்கயற்கண்
மின்னையுமா மதியைத்தேய்த்ததற்கென்றுவேய்ந்துமுடி
யின்னையுமா லவனைப்பதிசேர்த்ததிலாவிடிற்சூழ்
தென்னையுமா வுமணிகூடலெங்ஙனஞ்சித்திப்பதே. ௯௧

தேயமடங்க லுஞ்சென்றுவிசயஞ்செய்தேமன்றியுந்
தாயமடங்க னிகர்மாறன்செல்வத்துட்டோற்றத்தமென்
றாயமடங்க லில்வீறறவன்னமழைத்தைநல்லு
பாயமடங்க மழுவேசகூடலம்பண்மொழிக்கே ௯௨

பண்டந்தமா கப்புகழுமதுரைப்பதியரசு
கொண்டந்தமா மனுக்குன்னூருருவங்கொடுத்தவைபோல்
வெண்டந்தமா ரந்தவழ்முலைசேற்கண்கண்மெல்லியலார்
பெண்டந்தமா வுதவிக்கென்னைகைம்மாறெம்பிதாநவிலே. ௯௩

தானையவி ழச்சரியிட்டுப்பெண்களத்தம்பிடித்த
தேனையவி துன்னிலென்னன்னைகூடற்கிறைவிதன்பால்
ய[illegible]னையவி யளவுந்தெரித்தாலெளிதாகுங்கொலோ
மானையவி ர்[illegible]த்தோய்நாமிச்செய்கைமறத்தனன்றே. ௯௪

நன்றாயநி ன்மொழியையசிவத்திநன்மையல
வென்றாயநி யதியின்றிச்செங்காட்டிடையேதுணிந்து
சென்றாயநி யபிறந்தையைக்கொண்டுசிறுமகவைக்
கொன்றாயநி யமிலாமகவும்பெற்றைகூடலிலே. ௯௫

6468

கூடற்பதி யையகலாதுவைகநின்குன்றமுஞ்சி
ராடற்பதி னறுநாலாதிசெய்தவமலவுனை
நாடற்பதி கர்துதிமன்றமாய்நின்கணண்ணியதோ
பாட,ற்பதிக மெம்மாரியராற்பெற்றபண்ணவனே. ௯௬

நவமாவடி வுடையாய்போற்றியெண்குணநாயகவிங்
கவமாவடி யனைநீக்காதருளுமமலவிலா
வுவமாவடி யுறுகொன்றையபோற்றியொளிர்மதுரைச்
சிவமாவடி வந்திவைப்பேநிற்போற்றிமெய்ச்சின்மயனே. ௯௭

சினகர த்தால்விண்ணைப்பொன்னுடெனச்செயுந்தென்மது
தினகர னங்கியிமகரனுகுந்திருக்கணமைக் [ணைத்
கனகர மாறன்மருமகனுகியகாவலனே
யுனகர மாதியையக்கரந்தேற்றிடவுன்னுவையே. ௯௮

உன்னும ஞ்சொல்லி யுருகிப்பணிந்திங்குவப்பதற்கே
யென்னும னஞ்சென்னியைத்தந்தபாலையெனக்கருளுந்
தென்னும துரைப்பரிமேலழகசிவக்கொழுந்தே
பொன்னும டியருண்மெய்யறிவானந்தபூர்த்திசெயே ௯௯

செய்யவந்தா ரும்பதம்பொருள்கூடலெஞ்சேற்கணி[illegible]ய
யய்யவந்தா வினிினையன்றிவேறிலையாதலி[illegible]ற
பொய்யவந்தா னுறினுஞ்சிறியேனின்புகழுரைக்கும்
மெய்யவந்தா தியைக்கொண்டுசெய்வாயருண்மெய்த்திருவே

திருவிளையாடலந்தாதி

முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
உக	௰கூ	ன	ன்
உஉ	உ௰	ப	ய
உங	௰அ	ை	மை